# தமிழர்களின் மரபுவழி ஆடல்களும், விளையாட்டுக்களும்

# Traditional Dances and Games of the Tamils

***முனைவர் ரா. பிரியதர்ஷினி***
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம்)
இந்தியக் கல்வி அமைச்சகம்
பெரும்பாக்கம், சென்னை, தமிழ்நாடு, இந்தியா

**Dr. R. Priyadharshini**
*Doctoral Research Scholar*
*Central Institute of Classical Tamil*
*(Autonomous Institution)*
*Ministry of Education, Government of India*
*Perumbakkam, Chennai, Tamil Nadu, India*

**Citation**: Priyadharshini, R. "Traditional Dances and Games of the Tamils." *Journal of Tamil Culture and Literature*, vol. 5, no. 3, 2026, pp. 10-14.
**DOI**: *https://doi.org/10.5281/zenodo.19762043*

*ஆய்வுச் சுருக்கம்*
*தமிழர்களது மரபுவழி ஆடல்களுக்கும் விளையாட்டுக்களுக்கு மிடையே காணப்பெற்ற ஒப்புமைகள் வாழ்க்கைத் தொழிற்பாடுகளுக்கே காணப்பெற்ற ஒன்றிணைப்பைப் புலப்படுத்துகின்றன. தொழில் வழியான ஆடல் என்பது விளையாட்டு என்றும் குறித்துரைக் கப்பட்டது. விளையாட்டும் ஆடலும் மரபு வழித் தொழில்களின் வினைத்திறனை ஏற்படுத்தவல்ல, அறிகை ஆட்சி, எழுச்சி ஆட்சி, இயக்க ஆட்சி முதலியவற்றை வளர்ப்பதற்குத் துணைசெய்தன.*
***முக்கிய சொற்கள்:*** *பாரம்பரிய நடனம், விளையாட்டுகள், புரட்சி, செயல்பாடுகள், வலிமை, மனித வாழ்க்கை*

**Abstract**
*The similarities between traditional Tamil dances and sports reveal the connection between the activities of life. Professional dance was also described as a sport. Sports and dance not only enhanced the efficiency of traditional occupations, but also helped to develop knowledge governance, insurgency governance, movement governance, etc. Through these, the spirit of "joy" was developed. The goal of play is to bring joy, explains the Tolkappiyam, "The game of wealth is a game of perception, and there are four kinds of pleasures" (Tol.1205).In the continuous struggle of man with the environment, games and dances helped to increase human resources, increase strength, and assimilate the environment. They provided peace, comfort, self-defence, joy, etc. They reinforced group spirit and group activities. Dances and games help to understand the evolutionary development or evolutionary behaviours of living beings.*
***Keywords***: *Traditional Dance, Games, Revolution, Activities, Strength, Human Life*

*இவற்றினூடாக "மகிழ்ச்சி" என்ற மனவெழுச்சி வளர்த்தெடுக்கப்பட்டது. விளையாட்டின் இலக்கு மகிழ்ச்சியூட்டல்*

***"செல்வம் புலனே புணர்வு விளையாட்டென்று***
***அல்லல் நீத்த உவகை நான்கே" (தொல்.1205)***

*என்று தொல்காப்பியம் விளக்குகின்றது.*

*சூழலுடன் மனிதர் நிகழ்த்திய தொடர்ச்சியான போராட்டத்தில் மனித வளத்தைப் பெருக்கவும், வலுவைப் பெருக்கவும், சூழலைத் தன்வயப்படுத்தவும், விளையாட்டும்*

*ஆடலும் துணைசெய்தன, அமைதி, ஆறுதல், தற்காப்பு மகிழ்ச்சி முதலியவற்றை அவை வழங்கின. குழு உணர்வையும், குழுச்செயற்பாடுகளையும் அவை மீளவலியுறுத்தின. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை அல்லது படிமலர்ச்சி நடத்தைகளை விளங்கிக் கொள்வதற்கு ஆடல்களும் - விளையாட்டுக்களும் துணை செய்கின்றன. பறவைகளினதும், விலங்குகளினதும் விளையாட்டும், ஆடலும் ஒரே தன்மையினதாக அமைந்தன. ஆனால் மனிதரின் விளையாட்டுக்களும் ஆடல்களும் பலவகையினதாகவும், ஆக்கத்திறனை வெளிப்படுத்துவனவாகவும் அமையும். அதனுடன் வரலாற்றின் இயல்புகளையும் சிக்கல்ளையும் விளங்கிக் கொள்வதற்கு ஆடலும், விளையாட்டும் குறிகாட்டிகளாகத் தொழிற்படும்.*

*சூழலுடன் மனிதர் நிகழ்த்திய தொடர்ச்சியான போராட்டத்தில் மனித வளத்தைப் பெருக்கவும், வலுவைப் பெருக்கவும், சூழலைத் தன்வயப்படுத்தவும், விளையாட்டும் ஆடலும் துணைசெய்தன, அமைதி, ஆறுதல், தற்காப்பு மகிழ்ச்சி முதலியவற்றை அவை வழங்கின. குழு உணர்வையும், குழுச்செயற்பாடுகளையும் அவை மீளவலியுறுத்தின. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை அல்லது படிமலர்ச்சி நடத்தைகளை விளங்கிக் கொள்வதற்கு ஆடல்களும் - விளையாட்டுக்களும் துணை செய்கின்றன. பறவைகளினதும், விலங்குகளினதும் விளையாட்டும், ஆடலும் ஒரே தன்மையினதாக அமைந்தன. ஆனால் மனிதரின் விளையாட்டுக்களும் ஆடல்களும் பலவகையினதாகவும், ஆக்கத்திறனை வெளிப்படுத்துவனவாகவும் அமையும். அதனுடன் வரலாற்றின் இயல்புகளையும் சிக்கல்ளையும் விளங்கிக் கொள்வதற்கு ஆடலும், விளையாட்டும் குறிகாட்டிகளாகத் தொழிற்படும்.*

*சமூக வாழ்க்கையை மீளவலியுறுத்துதல், உற்பத்தித்திறன்களை மேம்படுத்தல், மிகைவலுவை வெளியிடல், உடலையும் உள்ளத்தையும் தொழிற்படவைக்கும் ஆயத்த நிலைக்குத்தூண்டுதல், ஆற்றல்களை மீளப்புதுப்பித்துக் கொள்ளல், சமூக நடிபங் குளை வலியுறுத்துதல், கட்டுப்பட்டு ஒழுகுதல், சமூக இடை வினைகளைச் செம்மைப்படுத்துதல் முதலாம் பல்வேறு செயற்பாடுகளை வளர்ப்பதற்கு விளையாட்டுக்களும் ஆடல்களும் துணைசெய்தன.*

*சமூக வரலாற்றில் மனித உடலியல் தன்மையின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தமை மரபுவழி விளையாட்டுக்களாலும், ஆடல்களினாலும் நன்கு வெளிப்படுகின்றன. சமூகக் கட்டுப்பாடுகளுக்கும், தனிமனித உடல் உள உந்தல்களுக்குமிடையேயுள்ள ஒற்றுமையும் மோதல்களும் விளையாட்டுக்களாலும், நடனங்களாலும் வெளிப்படுகின்றன. குரூரநிலையிலுள்ள மனித உணர்வுகளைப் பண்பட்ட நிலைக்கும், சமூக இசைவாக்கல் நிலைக்கும் அசைத்துச் செல்வதில் இவை இரண்டும் பலம் பொருந்திய இயக்கங்களாகச் செயற்படுகின்றன. சமூகத்தில் ஊடுருவியுள்ள நிரந்தர நிறைவின்மைக்கும் முரண்பாட்டுக்கும் வடிகால்களாக விளையாட்டுக்களும், நடனங்களும் ஆக்கம் பெற்றன.*

*ஆடலுக்கும் விளையாட்டுக்குமிடையே உள்ள தொடர்புகள் பழந்தமிழ் இலக்கியங்களிலே பரவலாகக் காணப்படுகின்றன. ''நயந்து ஆடும் விளையாட்டு'' என்ற தொடர் அகநானூற்றில் வருகின்றது. ''நகை விளையாட்டு'' என்ற தொடர் குறுந்தொகையில் இடம் பெறுகின்றது. விளை+ஆட்டு = விளையாட்டு. அதாவது விளைவுதரும் ஆடலே விளையாட்டு என்று விரித்துரைக்கப்படுகின்றது. அசதியாடல், அலவன் ஆடல், புள்ளாடல், ஊசலாடல், பந்தாடல் போன்ற தொடர்களில் விளையாட்டும் ஆடலும் ஒன்றெனக் கலந்து நிற்றலைக் காணலாம்.*

*தமிழர்களின் மரபுவழி விளையாட்டாகவும், ஆடலாகவும் விளங்கிய "குரவை" ஆடலை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, விளையாட்டுக்கும் ஆடலுக்குமுள்ள தொடர்புகள் மீள வலியுறுத்தப்படுதலைக் காணலாம். "பரதமகளிர் குரவையோ டொலிப்ப" (மதுரை.97), "மன்றுதொரு நின்ற குரவை" (மதுரை.615) முதலான தொடர்கள் மதுரைக்காஞ்சியில் இடம் பெறுகின்றன. புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம் முதலியவற்றில் குரவையாடலின் பல்வேறு பரிமாணங்கள் விளக்கப்படுகின்றன.*

*பறவைகளைப் பார்த்து அவற்றைப் போன்று ஆடுதலும், கூவுதலும் பண்டைய தொழில் முறைவளர்ச்சிக்கும், ஆடல் வளர்ச்சிக்கும், விளை யாட்டுக்களுக்கும் தூண்டுதல் தந்தன.*

***"சிறுகுறும் பறவைக் கோடி வரைவுடன்" (நற்.277)***

*என்று நற்றிணையிலும்,*

***"கோழி சேக்கும் கூடுடைப் புதலின் மூளை எயிற்றிரும் பிடி" (பெரும்.52),***

*என்று பெரும்பாணாற்றுப்படையிலும்,*

***"கோகுலமாய்க் கவுநரும் ஆகுலம் ஆகுநரும்"***

*என்று பரிபாடலிலும் தகவல்கள் கிடைக்கப்பெறுகின்றன.*

*பறவைகளைப் பின்பற்றி ஆடும் பொழுது, அவற்றின் ஆற்றல்கள் ஆடுவோருக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் தொல்குடி மக்களிடத்தே காணப்பெற்றது. மழை, காற்று, வெள்ளம், வெப்பம் முதலிய இயற்கை நிகழ்ச்சிகள் தோன்றுவதற்கு முற்பட்ட துலங்கல், விலங்குகளிடத்தும் பறவைகளிடத்தும் இருத்தல் அவர்களின் அவதானித்தலுக்கு உட்பட்டது. இவ்வாறான வாழ்நிலை உணர்வுகளிலிருந்து கலைநிலை ஆக்கங்கள் வளரலாயின.*

*சங்க இலக்கியங்களில் பந்தாடல் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. "சில்லு" என்ற அமைப்புவடிவம், கோளவடிவும் தொல்சீர் அறிவியற் புத்தாக்கங்களிற் சிறப்புப் பெற்றிருந்தன. விரைந்த நகர்ச்சிக்கு உதவும் சாதனங்களாக அவை செயற்பட்டன. தமிழ் மரபில் மனித ஆற்றல் மேம்பாட்டுக்கும் விரைந்த செயற்பாட்டுக்கும் குறியீடாக 'பந்து' அமைந்தது.*

***"பந்து நிலத்து எறிந்து பாவை நீங்கி" (நற்.179)***

*என்று நற்றிணையிலும்,*

***"வரிப்பனை பந்தொடு பாவை தூங்க" (திருமுரு.68)***

*என்று திருமுருகாற்றுப்படையிலும்,*

***"மலராமாலைப் பந்து கண்டனன்" (புறம்.33)***

*என்று புறநானூற்றிலும் செய்திகள் இடம் பெற்றுள்ளன.*

*விரைந்த அசைவுகளும், செயற்பாடுகளும் ஆடலையும், விளையாட்டையும் வளப்படுத்தின. இவை பரதநாட்டிய அமைப்பின் பிற்கால வளர்ச்சியிலே பெரிதும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன.*

*ஆடலும் விளையாட்டும் பொருளாக்கச் செயல்முறைக்கு நேரடியாகத் துணை செய்தன. தானியக்க கதிர்களைக் கொய்து கோவைப்படுத்தித் திரட்டுதல், காயவைத்தவற்றலை மாலைபோன்று தொடுத்துச் சேமித்து வைத்தல், முதலியவை தொல்குடியினரிடத்துக் காணப்பட்ட பொருள் நிலைப்பட்ட மாலையாக்கங்களாக இருந்தன. இலை, பூ, காய், பழம் முதலியவற்றை மாலையாக்கும் வழக்கமும் காணப்பட்டது. ஆடலும், பாடலும், விளையாட்டுமாய் இவ்வாறான தொழிற்பாடுகள் நிகழ்த்தப் பட்டன.*

***"பூக்கொய் மகளிர்" (குறுந்.26)***

*என்று குறுந்தொகையிலும்,*

**"பந்தழைமா மகளிரொடு" (பட்.91)**

என்று பட்டினப்பாலையிலும் இவை தொடர்பான தகவல்கள் காணப்படுகின்றன.

மாலைதொடுத்தலின் இயக்கப்பண்புகளை மிக நளினப்படுதல் தற்காலப் பரதநாட்டிய அசைவுகளிலே சிறப்பாகக் காணப்படுகின்றன. உற்பத்திப் பெருக்கோடு ஆடலும், பாடலும், விளையாட்டும் நேரடியாக இணைந்து காணப்பட்டன. இவை காய்களைச் சேர்த்தல், உருட்டி எடுத்தல். முதலிய பாரம்பரியமான செயற்பாடுகளினாற் புலப்படும். "கல்லார் கிறா அர் நெல்லி வட்டு ஆடும்" (நற்.3) என நற்றிணையிலும், "வட்டு உருட்டு வல்லாய்" (பரி.18) எனப் பரிபாடலிலும் செய்திகள் காணப்படுகின்றன. அவை வட்டு ஆடல்கள் எனப்பட்டன. தானியங்களை அளத்தல், இடித்தல், புடைத்தல் முதலியவற்றோடு விளையாட்டும் நடனங்களும் இணைந்திருந்தன. அவை "வள்ளை ஆடல்கள்" எனப்பட்டன.

தொழில் நுட்ப வளர்ச்சியிலும் மாதிரி உருவங்களை வடிவ அமைத்தல், அச்சு வடிவங்களை அமைத்தல் முதலியவை சிறப்பார்ந்த தொழிற் பாடுகளாக இருந்து வந்துள்ளன. தமிழ் இலக்கியங்களில் "பாவை புனைதல்" என்று இச்செயற்பாடு குறித்துரைக்கப்பட்டது. பாவை புனைதலோடு இணைந்த ஆடலும், பாடலும், விளையாட்டும் வளர்ச்சி பெறலாயின.

**"நெய்தல் பரப்பில் பாவை கிடப்பி" (குறுந்.114)**

என்று குறுந்தொகையிலும்,

**"செந்நீர்ப் பசும் பொன் புனைந்த பாவை" (மதுரை.410)**

என்று மதுரைக் காஞ்சியிலும், இவை தொடர்பான ஆதாரங்கள் கிடைக்கப் பெறுகின்றன. மாதிரி உருவங்கள் செய்யும் தொழில் நுட்ப வளர்ச்சியின் கோலங்களை, சிறுதேர் செய்தல், சிற்றில் செய்தல் முதலியவற்றுடன் தொடர்புடைய விளையாட்டுக்களும் ஆடல்களும் புலப்படுத்தும்.

**"தச்சன் செய்த சிறுமா வையம்**
**ஊர்ந்து இன்புறா அர் ஆயினும் கையின்**
**ஈர்த்து இன்புறும் இளையோர் போல" (குறுந்.61)**

என்று குறுந்தொகையிலும்,

**"மான்றோற் சிறுபறை கறங்கக கல்லென்" (மலை.321),**

என்று மலைபடுகடாத்திலும்,

**"பரி புனை சிற்றில் பரி சிறந்து ஓடி"(நற்.123)**

என்று நற்றிணையிலும்,

**"வரிமணல் முன்வரச் சிற்றில் புனைந்த" (கலி.114)**

என்று கலித்தொகையிலும் அடிகள் காணப்படுகின்றன.

பறவைகள், விலங்குகள் முதலியவற்றை விரட்டித் தினைப்புலங் காத்தல் தொடர்பான ஆடல்கள் உற்பத்திப் பெருக்கோடு நேரடியான இணைப்புக்களைக் கொண்டிருந்தன. இவ்வகை விளையாட்டுக்கள் "கவண்" விளையாட்டுக்கள் என்றும், "கவண் ஆடல்கள்" என்றும் குறித் துரைக்கப்பட்டன.

**"சுடுவிசைக் கவணின் எறிந்த சிறுகல்" (அகம்.292)**

என்ற தொடர் அகநானூற்றில் இடம் பெற்றுள்ளது.

"ஊசல்" என்ற எண்ணக்கருவும் தொழில்நுட்ப அறிக்கை வளர்ச்சியில் சிறப்புப் பெற்றதாக அமைந்தது. ஊசல் என்ற அமைப்பியல் சிறுபிள்ளைகளைத் தாலாட்டும் தொட்டில், பால், தயிர் வைக்கும் உறி, அடுக்களையில் தானியங்களையும், வற்றல்களையும் காயவைக்கும் தொங்கி, நீர் இறைப்புக்குப் பயன்படும் பட்டைக்கொடி, அல்லது பட்டைக்கயிறு முதலியவற்றின்

*ஆக்கத்துக்குப் பயன்பட்டது. ஊசலாடலைப் பாவனை செய்தலும், ஊசலமைத்து ஆடலும், விளையாட்டுக்களாக அமைந்தன.*

**"ஊசல் ஊர்ந்து ஆட, எரு ஞான்று வந்தானை"** *(கலி.37)*

*என்ற தொடர் கலித்தொகையில் இடம் பெற்றுள்ளது.*

**நிறைவுரை**

*கீரை கொய்தல், நீர் விசிறல், கலம் ஏந்தல், மோர்கடைதல், கூடை முடைதல் போன்ற தொழில் முறைகளோடு இணைந்த ஆடல்களும், விளையாட்டுக்களும் தமிழர்களது மரபு வழி அறிகைமுறைச் சொத்துக்களாக இருந்தன. காலவோட்டத்தில் தொழில் முறைமைகள் வளர்ச்சியடைய, தொழிற்பிரிவுகள் பன்முகமாகி வளர, தொழிலும், விளையாட்டும் ஆடல் முறைகளும் தனித்தனித் துறைகளாகப் பிரிந்து சென்றன. பலவகைக் கூத்துக்கள் தோன்றியமையும், கூத்தர், ஆடல் மகளிர் என்ற பிரிவினர் வளர்ச்சியுற்றமையும், பிற்கால நிகழ்ச்சிகளாயின சிலப்பதிகாரம், மணிமேகலை முதலியவற்றில் இந்த வளர்ச்சிக் கோலங்களைக் காணலாம். இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களில் தமிழர்களின் மரபு சார்ந்த ஆடல்களும், விளையாட்டுக்களும் பல வகைகளிலும் காணப்படுகிறது. அசதியாடல், அலவன் ஆடல், புள்ளாடல், ஊசலாடல், பந்தாடல், சிறுதேர் செய்தல், சிற்றில் செய்தல், பாவை புனைதல், சில்லு, ஊசல் மற்றும் நகை விளையாட்டு போன்ற ஆட்டங்களோடு ஆடலும் பாடலுமாக பரதம் போன்ற ஆட்டங்கள் நிகழ்த்தப் பெற்றதை நாம் அறியமுடிகிறது.*

**துணைநூற்பட்டியல்**


1. *புறநானூறு மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு - 2004.*
2. *பத்துப்பாட்டு மூலமும் உரையும் (தொகுதி-1, தொகுதி-2)*
3. *பொ. வே. சோமசுந்தரனார், கழக வெளியீடு, பதிபாண்டு - 2008.*
4. *சங்க இலக்கியம், எட்டுத்தொகை மூலமும் தெளிவுரையும் (தொகுதி - 1),*
5. *ச .வே. சுப்பிரமணியன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, மு. பதிப்பு - 2010.*